செ.வெ.எண்.377/2021 நாள்.08.09.2021

**திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 12.09.2021 அன்று நடைபெற உள்ள மாபெரும் கோவிட் -19 தடுப்பூசி சிறப்பு முகாம் முன் ஏற்பாட்டு பணிகள் குறித்த கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 12.09.2021 அன்று நடைபெற உள்ள மாபெரும் கோவிட் -19 தடுப்பூசி சிறப்பு முகாம் முன் ஏற்பாட்டு பணிகள் குறித்த கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப, அவர்கள் தெரிவித்ததாவது:-

திருப்பத்தூர் மாவட்டத்தில் வருகின்ற 12.09.2021 ஞாயிற்றுக்கிழமை அன்று மாபெரும் கோவிட்-19 தடுப்பூசி சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. இம்முகாம் மூலம் சுமார் 65,000 அறுபத்தைந்தாயிரம் நபர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்பட உள்ளது. மேலும் இம்முகாம் காலை 7 மணி முதல் இரவு 7 மணி வரை நடைபெறம். இம்முகாம் நமது மாவட்டத்தில் சட்டமன்ற தேர்தல் நடைபெற்ற வாக்குச்சாவடி மையங்கயில் இம்முகாம் நடைபெறும் எனவும், இம்முகாமில் அனைவரும் பங்கு பெற்று தடுப்பூசி செலுத்தி கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அமர்குஷ்வாஹா.இ.ஆ.ப, அவர்கள் அறிவித்தினார்கள்.

மேலும் இம்முகாம் குறித்து மாவட்டத்தில் உள்ள அனைத்து பகுதிகளிலும் ஒலிபெருக்கியின் மூலம் தகவல் தெரிவிக்கவும், உள்ளூர் தொலைக்காட்சி மற்றும் வானொலி மூலமாகவும் சிறப்பு முகாம் நடப்பது குறித்து மக்களிடையே விளம்பரம் செய்யவும் கேட்டுக்கொண்டார்கள். மேலும் இம்முகாமில் அனைத்து துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் பங்கு பெற்று திறன்பட பணிபுரியவும் அறிவுறுத்தினார்கள்.

கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எம்.ஆர்.சிபிசக்கரவர்த்தி.இ.கா.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திரு.என்சிஈ.தங்கையாபாண்டியன், திருப்பத்தூர் சார் ஆட்சியர் மரு.பி.அலர்மேல்மங்கை.இ.ஆ.ப, மகளிர் திட்ட அலுவலர் திருமதி.எஸ்.உமாமகேஸ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) (பொறுப்பு) திரு.விஜயன், துணை இயக்குநர் பொதுசுகாதாரம் திரு.செந்தில், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருப்பத்தூர் மாவட்டம்.**